மாதம் 1-ஆம் தேதி முதல் மாற்றியமைக்கப்பட்ட சம்பளம் கொடுக்கப்படும் என்று சொல்லப்பட்டும் இதுவரையில் கொடுக்கப்படாமல் இருக்கிறது. அதைக் கொடுப்பதற்கு நம்முடைய அரசு பேச்சு வார்த்தை நடத்தி சுமுகமான முடிவை மேற்கொள்ளலாம். ஏற்கெனவே அமைச்சரவர்கள் கொடுத்த அறிக்கையில் 6 முறை பேச்சு வார்த்தை நடத்தியிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இருந்தாலும், இன்னும் ஒரு மாதத்தில் அறிக்கை கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். மொத்தம் 113 காடர்கள் இருக்கின்றன. ஒரு மாதத்திற்குள் எல்லா காடர்கள் பற்றியும் முடிவு செய்வது கஷ்டம்; நிச்சயம் முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதை எல்லாம் பின்னால் மின்சார வாரியத்தின் மீதான விவாதம் வரும்போது தெரிவிக்கலாம்.

திரு. நா. வீராசாமி: குறைந்த பட்சம் இந்த ஆண்டு ஜூன் மாதத்திற்குள்ளாவது எல்லா காடர்கள் பற்றியும் முடிவு செய்து, தொழிலாளர்களை அழைத்துப் பேசி, நல்ல முறையில் சம்பளம் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: நம்முடைய தமிழக அரசைப் பொறுத்தவரையில், நம்முடைய மின்சார வாரியத் தொழிலாளர்களுடன் நேரடியாகப் பேச்சு வார்த்தை நடத்தி, வேஜ் ரிவைஸ் செய்து கொண்டிருக்கிறோம். இப்போதும் பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருக்கிறது. எல்லாக் காடர்கள் பற்றியும் ஒரு மாதத்திற்குள் முடிவு செய்வது என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல், கஷ்டம்தான். இருப்பினும் விரைவில் முடிவு செய்யப்படும். அதே நேரத்தில் மத்திய அரசின் ஊதிய முடக்குச் சட்டத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும். அதையும் கவனத்தில் கொண்டு முடிவு எடுக்க வேண்டியிருக்கிறது.

தஞ்சை மாவட்டத்தில் சிறப்பங்காடிகள்.

*621 வினா: திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1974-75-ம் ஆண்டில், தஞ்சை மாவட்டத்தில் புதிய கூட்டுறவு சிறப்பங்காடிகள் ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா?

(இ) ஆம் எனில், எங்கெங்கு ஏற்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்:

(அ) ஆம்.

(இ) திருவாரூர், திருக்காட்டுப்பள்ளி ஆகிய இடங்களில் சிறு சிறப்பங்காடிகள் ஏற்படுத்தும் செயற் குறிப்பு பரிசீலனையில் உள்ளது. நாகப்பட்டினத்தில் ஒரு சிறு சிறப்பங்காடி திறக்க நிதியுதவி அனுமதிக்கப்பட்டுள்ளது. பட்டுக்கோட்டையில் ஒரு சிறப்பங்காடி திறக்கப்பட்டுவிட்டது.

கைதிகளுக்கு செய்தித்தாள்கள் வழங்கல்.

* 622 வினா : டாக்டர் எச். வி. ஹாண்டே : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறைச்சாலையில் உள்ள கைதிகளுக்கு செய்தித்தாள்கள், வார, மாத இதழ்கள் வழங்கப்படுகின்றனவா ?

(இ) ஆமெனில், அதன் விபரங்கள் யாவை ?

(உ) தென்னகம், சமநீதி போன்ற எதிர்க்கட்சி பத்திரிகைகளும் கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) "சி" பிரிவு கைதிகளுக்கு ஒவ்வொரு 100 பேருக்கும் அல்லது அதில் மீதமுள்ள பகுதியினருக்கும் கீழ்கண்ட தினசரி தாள்களில் ஏதேனும் ஒன்று வீதம் அரசு செலவில் வழங்கப்பட்டு வருகின்றது.

1. தினமணி (தமிழ்)
2. நவமணி (தமிழ்)
3. தினத்தந்தி (தமிழ்)

கைதிகளிடையே பாகுபாடின்றி ஒவ்வொரு 200 பேருக்கும் அல்லது அதில் மீதமுள்ள பகுதியினருக்கும் கீழ்கண்ட வார, மாதமிருமுறை, மாத இதழ்களில் ஏதேனும் ஒரு இதழ் வீதம் அரசு செலவில் வழங்கப்படுகின்றது.

1. ஹோவார்ட் ஜர்னல்
2. சித்திரகுப்தா
3. பாரத்
4. கல்கி